# எந்திரவியல் தொழில்நுட்பம்

## பரீட்சைக்கான ஆயத்தம்

## க.பொ.த உயர்தரம் தொழில்நுட்பபிரிவு - 2021


### வினாப்பத்திரம் : 02

பெயர் : ...........................


**நேரம் : 1.00 மணித்தியாலம்**

**ஆசிரியர் : S.திலகசிறி** Dip in Teach, B.Tec    Tel : 077-6976938   Whatsapp : 075-2673773

**1. எந்திரவியல் தொழில்நுட்ப மாணவர்கள் தமது வகுப்பறையில் ஏற்படும் மண், தூசு போன்ற கழிவுகளை அகற்ற தேவையான அமைப்பு ஒன்றினை உலோகத்தகட்டினைப் பயன்படுத்தி தாமே உற்பத்தி செய்துகொண்டனர். அதன் அமைப்பு பின்வருமாறு காணப்பட்டது. அதன்கீழே கேட்கப்படும் வினாக்களுக்கு விடை தருக.**




பக்கத் தோற்றம்




பின்புறத் தோற்றம்

1. மேற்படி அமைப்பிற்கான விரியலினை 1:1 எனும் அளவுத்திட்டத்திற்கமைய வரைதற்பொறிமுறைக்கமைய வரைக.

2. மேற்டி அமைப்பினை உருவாக்க தேவையான உலோகத்தகட்டின் அதிகுறைந்த பரப்பளவு யாது?

3. குறித்த அமைப்பினை உருவாக்கும்போது பயன்படுத்தும் கருவிகள் உபகரணங்களை பட்டியலிட்டு அதில் இரு கருவிகளின் புறத்தோற்றத்தினை வரைந்து அதன் பாகங்களை குறித்துக்காட்டுக.

4. இங்கு பயன்படுத்தக்கூடிய வலுவியக்க உபகரணம் யாது? அதற்கு மாற்றீடாக பயன்படுத்தக்கூடிய கையுபகரணம் யாது? அதன் புறத்தோற்றத்தை வரைந்து பாகங்களை குறித்துக்காட்டுக.

Thilagasri23@gmail.com

5. குறித்த அமைப்பில் உலோகத்தகட்டினது பாகங்கள் எவ் முறைமூலம் இணைக்கப்பட்டுள்ளன? இதற்கு மாற்றீடாக பயன்படுத்தக்கூடிய உலோக இணைப்பு முறை யாது? அவற்றை சுருக்கமாக விளக்குக.

6. இவ் அமைப்பினை உருவாக்குவதற்கான செயற்பாட்டினை படிமுறையாக விளக்குக.

7. மின்வில்முறைக் காய்ச்சியிணைத்தல் என்றால் என்ன?

8. மின்வில்முறை காய்ச்சியிணைத்தல் மூலம் இவ் அமைப்பின் பாகங்களை இணைக்க முடியுமா? காரணம் தருக.

9. இவ் அமைப்பினை நீண்டகாலம் பயன்படுத்துவதுடன் அழகிய தோற்றத்தை ஏற்படுத்துவதற்காகவும் வர்ணப்பூச்சு மேற்கொள்ளப்பட்டது. எனவே இதற்கு பயனபடுத்தப்படும் வர்ணப்பூச்சு வகை யாது? இதன்போது பயன்படும் பொருட்களை பட்டிற்படுத்துக.

10. மேலே குறித்த உலோகத்தினாலான அமைப்பை உருவாக்க தேவையான செலவிற்கான பரும்படி மதிப்பீட்டறிக்கையினை தருக.

Thilagasri23@gmail.com